<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 28.04.2026 அ.வ.எண். 227/2016, வா.சா.1. பாலசுப்பிரமணியன், த/பெ. லட்சுமணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

16) 1 ம் பிரதிவாதியின் தம்பி மனைவி தான் 2 ம் பிரதிவாதி என்றால் சரிதான். அ.வ.எண். 131/1939 வழக்குப்படி ராமசாமிக்கு ஏ அட்டவணை சொத்து பாத்தியப்பட்டு அவர் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான் அவருடைய சொத்து அவரது அம்மா சீரங்கம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.மேற்படி சீரங்கம்மாள் தனது மகள் வள்ளியம்மாளுக்கு 29.06.1955 ல் ஒரு உயில் எழுதிவைத்தார் என்றால் சரிதான்.

17) வள்ளியம்மாள் அவரது ஆயுள் காலத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதியின் கணவர் பரமசிவத்திற்கும் உயில் எழுதிவைத்தார் என்றால் சரிதான். மேற்படி பரமசிவத்தின் சொத்தை தான் அவரது மனைவி 2ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். பிஅட்டவணை சொத்தில் உள்ள வண்டித்தடத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் சென்று வருவதற்கு உரிமை உள்ளது என்றால் சரிதான் மேற்படி வண்டித்தடத்தில் தான் நானும் சென்று வருகிறேன் என்றால் சரிதான்.

18) 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பி அட்டவணை வண்டித்தடத்தின் கிழபுறமும் மேல்புறமும் பூமிகள் உள்ளது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு மேற்படி பி அட்டவணை வண்டித்தடத்தை தவிர வேறு தடம் இல்லை என்றால் சரிதான். தாவா வண்டித்தடத்தில் ஆரம்பத்தில் 17 அடியும் 1 ம் பிரதிவாதி மற்றும் 3 ம் பிரதிவாதியின் பூமியின் வரப்புகளுக்கு 12 1/2 அடியும் மற்றும் வண்டித்தடத்தில்

ஒப்பம்/−(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி .

வீல் மார்க் தடம் 9 அடி என்று நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்என்றால் சரிதான்

19) பி அட்டவணை வண்டித்தடத்தில் 12 அடி அகலம் கொண்ட தடத்தை 2 ம் பிரதிவாதி அனுபவிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். அதே போல் 12 அடி அகலம் கொண்ட தடத்தை 2 ம் பிரதிவாதி அனுபவிப்பதை தடுப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரிதான்.

**4 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி .